


**05.12. 2024**

**தலைப்புச் செய்திகள்**

1. இயற்கை பேரிடர்களிலிருந்து விவசாயிகளை பாதுகாக்க புதிய தொழில்நுட்பங்கள் கண்டறியப்பட வேண்டும் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. எதிர்கட்சிகளின் அமளி காரணமாக மக்களவை இன்று பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

3. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியில் தமிழகம் நாட்டிலேயே 3ஆவது மாநிலமாக திகழ்வதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. சாத்தனூர் அணையை பாதுகாக்கும் வகையில் மழைகாலங்களில் தென்பெண்ணை ஆற்றுநீர் பாலாற்றுக்கு திருப்பிவிடப்படும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் கூறியுள்ளார்.

5. குஹாட்டி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு இந்தியாவின் தருண் மன்னேபள்ளி முன்னேறியுள்ளார்.

**இனி விரிவான செய்திகள்**

************

**குடியரசு தலைவர்**

இயற்கை பேரிடர்கள் காலநிலை மாற்றம், இயற்கை வள--சுரண்டலுக்கு எதிராக விவசாயிகளை பாதுகாப்பதற்கான திட்டங்களை விஞ்ஞானிகள் கண்டறிய வேண்டும் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

ஒடிசா தலைநகர் புபனேஸ்வரில் வேளாண் தொழில்நுட்ப பல்கலைகழகத்தின் 40ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர் ட்ரோன் தொழில்நுட்பம், தொலையுணர்வு, செயற்கை நுண்ணறிவு, நுண்மீன் தொழில்நுட்பம் போன்றவற்றின் மூலம் விவசாயம் ஆளுமை பெறுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்றார்.

கடந்த சில ஆண்டுகளில் வேளாண் தொழிலில் இந்தியா பெரும் வளர்ச்சி கண்டுள்ளதாகவும், உணவு தானியங்களும் வேளாண் உபகரணங்களும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

வேளாண் தொழிலுக்கு உகந்த பருவநிலை திறன்படைத்தவர்கள், வளமான நிலங்கள், சிறந்த தொழில்நுட்பங்கள் ஆகியவற்றின் மூலம் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்று கூறினார்.

வேளாண்மையும், விவசாயிகளும் வளர்ச்சியடைந்தால் மட்டுமே இந்தியா வளர்ச்சி அடைந்த நாடு இலக்கை எட்ட முடியும் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து நவீன வசதியுடன் கூடிய புதிய நீதிமன்ற வளாகத்தையும் குடியரசுத்தலைவர் இன்று பிற்பகல் அங்கு திறந்துவைக்கிறார்.

************

**மக்களவை**

உத்திரபிரதேச மாநிலம் சம்பல் வன்முறை பிரச்சனை தொடர்பாக நிலவிய அமளி காரணமாக மக்களவை பிற்பகல் 2 மணிவரையிலம், மாநிலங்களவை நண்பகல் வரையிலும் ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவையில் கேள்வி நேரத்திற்கு பின்னர் சம்பல் வன்முறை தொடர்பாக ஃபிரஞ்ச் நாளேட்டில் வெளியான செய்தியை சுட்டிக்காட்டிய பிஜேபி உறுப்பினர் திரு.நிஷிகாந்த் காங்கிரஸ் மூத்த தலைவர்களுக்கு எதிராக சில குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த எதிர்கட்சி உறுப்பினர்கள் பிரபல வணிக நிறுவனத்திற்கு எதிராக கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் சம்பல் வன்முறை சம்பவங்களை எழுப்பி முழக்கமிட்டனர்.

இதனால் நிலவிய அமளியால் மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் பிரஞ்ச் நாளேட்டில் வெளியான செய்தி குறித்த பிரச்சனையை எழுப்பிய பிஜேபி உறுப்பினர் திரு. சுதான்ஷு திரிவேதி நம் தேச நலனுக்கு எதிராக வெளிநாடுகளில் தாக்குதல் தொடுக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

கடந்த 3 ஆண்டுகளில் நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடக்கும் போதெல்லாம் இத்தகைய அறிக்கைகள் வெளியாவதாகவும்,

வளர்ச்சி அடைந்த நாடாக இந்தியா முன்னேறிவரும் நிலையில் அதை சீர்குலைப்பதற்காக இத்தகைய தாக்குதல்கள் நடைபெறுவதாகவும் குறிப்பிட்டார்.

அப்போது பேசிய அவைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் இது ஒரு முக்கியமான பிரச்சனை என்று கூறி இதற்கு அனுமதி வழங்கியதோடு, நிர்ணயிக்கப்பட்டதை விட கூடுதல் அவகாசத்தை அவருக்கு வழங்கினார்.

இதற்கு எதிர்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இப்பிரச்சனை குறித்து பேச எதிர்கட்சி உறுப்பினர்களுக்கும் அனுமதி வழங்கப்படும் என்று அவைத்தலைவர் குறிப்பிட்டார்.

ஆனால் அவையில் தொடர்ந்து அமளி நிலவவே மாநிலங்களவை நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

************

**ஆர்பாட்டம்**

முன்னதாக எதிர்கட்சி உறுப்பினர்கள் பிரபல வணிக நிறுவனத்திற்கு எதிராக கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பான பிரச்சனையில் நாடாளுமன்ற வளாகத்தில் இன்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்விஷயத்தில் நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் விசாரணை கோரி அவர்கள் முழக்கமிட்டனர்.

************

**கிரண் ரிஜுஜு**

இதனிடையே எதிர்கட்சிகளின் ஆர்பாட்டத்திற்கு நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு கண்டனம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசியஅவர், அவைக்கு உள்ளே பேசுவதற்கு பதிலாக அவைக்கு வெளியே இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து அவர் குறைகூறினார்.

************

**கின்ஜரப்பு ராம் மோகன் நாயுடு**

நாட்டில் தற்போது 157 விமான நிலையங்கள் செயலாக்கத்தில் உள்ளதாக மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு. கிஞ்சரப்பு ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர் பிரதமர் திரு.நரேந்திரமோடி அரசின் கீழ் விமான இணைப்புகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

விமான போக்குவரத்து துறையில் உதான் திட்டம் ஒரு புரட்சிகரமான திட்டம் என்று எடுத்துரைத்த அவர் இந்தியாவின் உள்நாட்டு விமான போக்குவரத்து நாளொன்றுக்கு 5 லட்சம் பயணிகளுடன் புதிய மைல்கல்லை எட்டியிருப்பதாக குறிப்பிட்டார்.

************

**பிரதமர்**

இந்தியா வந்துள்ள பூடான் அரசர் ஜிக்மே கேசர்-உடன் பிரதமர் திரு.நரேந்திரமோடி புதுதில்லியில் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கரும் இருதரப்பு ஒத்துழைப்பு, மற்றும் அதனை முன்னெடுத்து செல்வது குறித்து அவருடன் பேச உள்ளார். முன்னதாக இந்தியா வந்த பூடான் அரசரை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் விமான நிலையத்தில் வரவேற்றார்.

************

**பிரதமர் வாழ்த்து**

ஆசிய ஜுனியர் ஹாக்கி போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற இந்திய அணியை பிரதமர் திரு.நரேந்திரமோடி வாழ்த்தியுள்ளார்.

இளையோரின் தன்னிகரற்ற திறமை, ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு, அர்ப்பணிப்பு, போன்றவற்றால் இந்த வெற்றி சாத்தியமானதாகவும், எதிர்காலத்தில் மேலும் பல வெற்றிகளை குவிக்கவும் பிரதமர் வாழ்த்து தெரிவித்தார்.

************

**மஹாராஷ்டிரா**

மஹாராஷ்டிரா முதலமைச்சராக பிஜேபியின் திரு.தேவேந்திர ஃபட்நாவிஸ் இன்று பதவி ஏற்கிறார்.

மும்பையில் இன்றுமாலை நடைபெறும் நிகழ்ச்சியில் அம்மாநில ஆளுநர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் அவருக்கு பதவி பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்துவைக்கிறார்.

இந்நிகழ்வில் பிரதமர், மத்திய அமைச்சர்கள் தேசிய ஜனநாயக கூட்டணி ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

************

**முதலமைச்சர்**

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியில் தமிழகம் நாட்டிலேயே 3ஆவது மாநிலமாக திகழ்வதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் காலநிலை மாற்ற நிர்வாக குழு ஆலோசனைக்கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர் 2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் 50 சதவிகித புதுப்பிக்கத்தக்க ஆற்றலை இலக்காக கொண்டு அரசு செயலாற்றுவதாக கூறினார்.

காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

**வாய்ஸ்**

முன்னதாக சென்னை தலைமை செயலகத்தில் மாற்று திறனாளிகளுக்கான விழுதுகள் மறுவாழ்வு சேவை ஊர்தியை தொடங்கிவைத்தார்.

மேலும் அரசு புனர்வாழ்வு மருத்துவமனை வளாகத்தில் ஒருங்கிணைந்த மருத்துவ சேவை மையங்களை அவர் திறந்துவைத்தார்.

************

**துரைமுருகன்**

மழைக்காலங்களில் சாத்தனூர் அணை பாதிக்காத வகையில் தென்பெண்ணை ஆற்று தண்ணீரை திருப்பத்தூர் காக்கங்கரை ஏரி வழியாக பாலாற்றில் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

வேலூர் குடியாத்தத்தில் நிகழ்ச்சியில் இன்று பேசியஅவர், மோர்தானா அணை பகுதியை சுற்றுலாதளமாக மாற்ற தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

குடியாத்தம் பகுதிகளில் மழைநீர் ஏரிகளுக்கு திருப்பிவிடப்பட்டதால் பல ஏரிகள் நிரம்பியுள்ளதாக அவர் கூறினார்.

************

**PSLV**

PSLV C-59 ராக்கெட் ஐரோப்பிய விண்வெளி முகமையின் பிரோபா 3 செயற்கைகோள்களுடன் ஸ்ரீஹரிகோட்டா சதீஸ்தவான் விண்வெளி

மையத்திலிருந்து இன்று மாலை, மணி 4.04-க்கு விண்ணில் செலுத்தப்படும் என இஸ்ரோ அறிவித்துள்ளது.

இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் News Space இந்திய நிறுவனத்தின் சார்பில் செலுத்தப்படும் இந்த இரட்டை செயற்கைகோள்கள் சூரியனின் புறஊதாக்கதிர்களை ஆய்வு செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

************

**பெரியகருப்பன்**

சிவகங்கை மாவட்டம் மேலூர் காரைக்குடி இடையே 6 கோடியே 59 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை பணிகள் மற்றும் வளர்ச்சி பணிகளை மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.பெரியகருப்பன் இன்று ஆய்வு செய்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் பொருளாதார வளர்ச்சி அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாடு உள்ளிட்டவற்றில் அரசு தனி கவனம் செலுத்தி அவற்றை நிறைவேற்றிவருவதாக கூறினார்.

************

**தா.மோ.அன்பரசன் நிவாரணம்**

சென்னை பட்டினபாக்கம் ஸ்ரீனிவாசபுரம் திட்டபகுதியில் நேற்றிரவு ஏற்பட்ட கட்டிட விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு தமிழக நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் 5 லட்ச ரூபாய் நிவாரண நிதி வழங்கப்படுவதாக மாநில குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார்.

************

**புயல் நிவாரணம்**

ஃபென்ஞல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் கடலூர், கள்ளக்குறிச்சி மாவட்ட மக்களுக்கு அரசு சார்பில் 2 ஆயிரம் ரூபாய் நிவாரண தொகை வழங்கும் பணிகள் தொடங்கியுள்ளன திருக்கோவிலூர் நகராட்சியில் 450 குடும்பங்களுக்கு நிவாரணத்தொகை மாநில அமைச்சர் திரு. க.பொன்முடி இன்று வழங்கினார்.

************

**மீனவர்கள்**

கச்சதீவு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்த 14 ராமேஸ்வர மீனவர்களையும், அவர்களது 2 படகுகளையும் இலங்கை கடற்படை இன்று அதிகாலை பிடித்து சென்றுள்ளது.

**இதுகுறித்து எமது ராமநாதபுரம் செய்தியாளர்**

**வாய்ஸ்**

************

**இருவரி**

**சிவகங்கை மாவட்டம் சாலூர் கிராமத்தில் மக்கள்** தொடர்பு முகாம் வரும் 11-ம் தேதி நடைபெறுவுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. ஆ'ாஅஜித் தெரிவித்துள்ளார்.

************

**மண்வள தினம்**

உலக மண் வள தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் மண் வளத்தின் பங்கு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நாளின் நோக்கமாகும். "மண் வளத்தை பாதுகாப்போம் மண்ணை பராமரித்தல், அளவிடுதல், கண்காணித்தல், நிர்வகித்தல்" என்பதே இந்தாண்டின் கருப்பொருளாகும்.

************

**ஒகேனக்கல்**

**ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று** வினாடிக்கு 21 ஆயிரம் கன அடியாக குறைந்ததை அடுத்து சின்னாறு முதல் கோத்திகள் பாறை வரை பரிசல் இயக்க மாவட்ட நிர்வாகம் அனுமதி அளித்துள்ளதாக எமது தர்மபுரி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**இதேபோல் நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு** அருவியில் நீர்வரத்து சீரானதை தொடர்ந்து 21 நாட்களுக்கு பின்னர் சுற்றுலா பயணிகள் குளிக்க வனத்துறை அனுமதி வழங்கியுள்ளது.

************

**கோவில்**

மதுரை திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் கார்த்திகை தீப திருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

************

**பேட்மிட்டன்**

குஹாட்டி மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு இந்தியாவின்
தருண் மன்னேபள்ளி முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆட்டத்தில் தருண் பிரியான்ஷ ரஜாவத்தை 24-22, 15-21, 21-13 எனும் செட்களில் வென்றார்

மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு இந்தியாவின் தன்வீ ஷர்மாவும், கலப்பு இரட்டையர் காலிறுதிக்கு இந்தியாவின் ரோஹித் மோகன்குமார், ரிதுவர்ஷினி ராமசாமியும் முன்னேறியுள்ளனர்.

************

**கிரிக்கெட்**

பிரிஸ்பேனில் இந்திய மகளிர் அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் 101 என்ற வெற்றி இலக்குடன் விளையாடும் ஆஸ்திரேலியா சற்றுமுன் 14 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 77 ரன் எடுத்திருந்தது.

முதலில் பேட் செய்த இந்தியா 35ஆவது ஓவரில் 100 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

************